**OS.NO: 11/2024**

**PW 1 :** குமரன் த/பெ. கோவிந்தராஜ்

நாள் : 11.11.2025

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:**

எனக்கு பிரதிவாதி ஜான் கென்னடியை சுமாராக 10 – 15 ஆண்டுகளாக தெரியும் என்று சொன்னால் சரிதான். நான் ரியல் எஸ்டேட் தொழில், டிரேடர்ஸ் மற்றும் பைனான்ஸ் ஆகிய தொழில்கள் செய்து வருகிறேன் என்று சொன்னால் சரிதான். மேற்படி 3 தொழில்களையும் அரசின் அனுமதி பெற்று தான் செய்து வருகிறேன் என்று சொன்னால் சரிதான். மேற்படி 3 தொழில்களில் ரியல் எஸ்டேட் தொழில் மட்டும் நானும் எனது சகோதரரும் சேர்ந்து செய்கிறோம். மற்ற 2 தொழில்களும் நான் மட்டும் தனியாக செய்து வருகிறேன்.

நான் ஜெய் டெவலப்பர்ஸ் என்ற பெயரில் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். பைனான்ஸ் தொழிலுக்கு பெயர் இல்லை. டிரேடர்ஸ்க்கு ஜீ. ஜீ. ராஜ் என்ற பெயரில் டிரேடர்ஸ் தொழிலை செய்து வருகிறேன். மேற்படி தொழில்களுக்கு வருமான வரி செலுத்துகிறேனா என்றால் செலுத்தி வருகிறேன். எனக்கு ஆங்கிலம் மற்றும் தமிழ் தெரியும். தாவா மற்றும் பிராமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் நான் கூறிதான் தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான்.

என்னுடைய பிராமாண வாக்குமூலத்தில் பத்தி 2–ல் பிரதிவாதிகள் ரூ.20 இலட்சத்திற்கு ஆண்டுக்கு 24 சதவீதம் வட்டி செலுத்த வேண்டும் என்று ஒப்புக்கொண்டதாக கூறியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். மேற்படி பிரதிவாதிகள் என்று நான் கூறியுள்ளது ஜான் கென்னடியையும், அவரது தாயாரையும் தான். இந்த வழக்கில் நான் ஜான் கென்னடியின்

தாயாருக்கு வழக்கறிஞர் அறிவிப்பும் அனுப்பவில்லை, அவரை ஒரு தரப்பினராகவும் சேர்க்கவில்லை என்று சொன்னால் சரிதான்.

4 தவணைகளிலும் ஒவ்வொரு தொகைகளையும் நான் வட்டிக்காக தான் கொடுத்தேன் என்று சொன்னால் சரிதான். பிரதிவாதி எனக்கு வட்டி தொகையை செலுத்தினார். பிரதிவாதி முதலில் வாங்கிய ரூ.5 லட்சத்திற்கு மூன்று மாதங்கள் மாதம் ரூ.10,000/– வீதம் ரூ.30,000/– கொடுத்தார். அதன் பிறகு பெற்ற தொகைக்கு ஆறு மாதங்கள் வட்டியை செலுத்தினார். இரண்டாவது பெற்ற தொகைக்கு மாதம் ரூ.20,000/– வட்டி செலுத்தி வந்தார். மூன்று மற்றும் நான்காவதாக பெற்ற தொகைகளுக்கு பிரதிவாதி வட்டி செலுத்தவில்லை.

10.02.2017 அன்று பெற்ற தொகைக்கு ரூ.10,000/– வட்டி தொகை பாக்கி உள்ளது என்று சொன்னால் சரிதான். 20.06.2017 க்கும் 26.03.2018 ற்கும் இடையே மூன்று மாதம் வட்டி தொகை பாக்கி என்று சொன்னால் சரிதான். அதன் பின்னர் 30.05.2018–ல் என்னிடம் அவர் பணம் வாங்கும் வரை ஏறக்குறைய ரூ.1,30,000/– வட்டித் தொகை பாக்கியிருந்தது என்று சொன்னால் சரிதான்.

30.05.2018 ல் இருந்து கிரைய ஒப்பந்தம் எழுதும் வரை மாதம் ரூ.40,000/– என கணக்கிட்டால் ஏறக்குறைய ரூ.7,60,000/– வட்டித் தொகை நிலுவையில் உள்ளது என்று சொன்னால் சரிதான். மொத்த வட்டித்தொகையையும் கூட்டி கழித்து பார்த்தால் கிட்ட தட்ட ரூ.10,00,000/– வட்டி தொகை பிரதிவாதி எனக்கு செலுத்த வேண்டும் என்று சொன்னால் சரிதான்.

நான் தாக்கல் செய்த பிராதில் 3–ம் பத்தியில் பிரதிவாதி என்னிடம் வாங்கிய பணத்திற்கு அவர் புரோ நோட்டு எழுதிக் கொடுத்ததாக கூறவில்லை என்று சொன்னால் சரியல்ல கூறியுள்ளேன். நான் அவ்வாறு கூறவில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக கூறிகிறேன் என்று சொன்னால் சரியல்ல.

பிரமாண வாக்குமூலத்தில் 2-ம் பத்தியிலாவது மேற்படி பிரதிவாதி என்னிடம் கடன் வாங்கிக்கொண்டு புரோ நோட்டு எழுதிக்கொடுப்பதாக கூறிவில்லை என்று சொன்னால் சரிதான். ஒவ்வொரு தொகையையும் பிரதிவாதியும் அவரது தாயார் ஞான சௌந்தரியும் ஒன்றாக சேர்ந்து வந்து தான் என்னிடம் வாங்கி சென்றார்கள். ஒவ்வொரு முறையும் நான் இருவரிடமும் புரோ நோட்டை தான் வாங்கினேன். ஒவ்வொரு முறை அவர்கள் பணம் வாங்கும் போதும் அவர்கள் வட்டி பாக்கி வைத்த விவரம் பற்றி எனக்கு தெரியுமா என்று சொன்னால் சரிதான்.

தாவா கிரைய ஒப்பந்தம் எழுதும் வரை மேற்படி 4 புரோ நோட்டுகளும் என் வசம் இருந்ததாக கூறியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். மேற்படி பாண்டுகளின் சாட்சிகளையும் எழுது காரரை வைத்து தான் எழுதினேனா என்றால் ஆமாம். மேற்படி சாட்சிகள் மற்றும் எழுதுகாரர் பற்றிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

பிரதிவாதிகள் மேற்படி வட்டித் தொகையை பாக்கி வைத்தது குறித்து நான் பாண்டுகளில் வரவு வைத்துக்கொண்டேனா என்றால் அதில் வைக்கவில்லை. பிரதிவாதி எடுத்து வந்த நோட்டில் வரவு வைத்தேன். மேற்படி புரோ நோட்டுகள் G.குமரன் பெயரில் தான் எழுதப்பட்டவை என்று சொன்னால் சரிதான். மேற்படி புரோ நோட்டுகள் பைனான்ஸ் பெயரில் இல்லை என்று சொன்னால் சரிதான்.

ரூ.20 லட்சமும் நான் அவர்களுக்கு ரொக்கமாக தான் கொடுத்தேன். நான் கடந்த 10 முதல் 15 ஆண்டுகளாக வருமான வரிச் செலுத்திவருகிறேன்.

நான் ஒவ்வொரு ஆண்டும் நான் தாக்கல் செய்யும் கணக்கு வழக்குகள் அடிப்படையில் தான் வருமான வரி கணக்கிடப்படுகிறது என்று சொன்னால் சரிதான். நான் 2017-ம் ஆண்டில் பிரதிவாதி மற்றும் அவரது

தாயாருக்கு ரூ.10 லட்சமும், 2018 –ம் ஆண்டில் அவர்களுக்கு ரூ.10 லட்சமும் கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரிதான்.

என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வாதசாஆ.6 மற்றும் வாதசாஆ.7 ஆகிய இரண்டும் G.G.R Enterprises என்ற பெயரில் தான் உள்ளது என்று சொன்னால் சரிதான். 2016 –ல் இந்திய அரசாங்கம் பணமதிப்பீட்டு இழப்புச் சட்டம் கொண்டு வந்த விவரம் பற்றி எனக்கு தெரியும் என்று சொன்னால் சரிதான். ரூ.20,000/– ற்கு மேல் ரொக்கமாக பண பரிவர்த்தனை செய்யக்கூடாது என்பது பற்றிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

முதலில் தாவாவை தாக்கல் செய்த போது வாதசாஆ.6 மற்றும் வாதசாஆ.7 ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றும் பிரதிவாதி எதிர் வழக்குரை தாக்கல் செய்த பிறகு தான் தாக்கல் செய்தேன் என்று சொன்னால் சரிதான். வாதசாஆ.6 மற்றும் வாதசாஆ.7 ஆவணங்களில் எந்த இடத்திலாவது பிரதிவாதிக்கும், அவருடைய தாயாருக்கும் தலா ரூ.10 இலட்சம் செலுத்திய விவரம் பற்றி கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன்.

2018 மற்றும் 2019 –ம் ஆண்டில் நான் தாக்கல் செய்துள்ள வருமான வரிக்கணக்கில் 31.03.2018 வரை ஜான் கென்னாடியும் அவரது அம்மாவும் எனக்கு ரூ.15 லட்சம் பாக்கி என்று கூறியுள்ளேன்.

2019 மற்றும் 2020 –ம் ஆண்டில் பிரதிவாதியும் அவரது தாயாரும் மார்ச் 2019 க்குள் ரூ.20 இலட்சம் பாக்கி என்று கூறியுள்ளேன். வாதசாஆ.6 மற்றும் வாதசாஆ.7 வழக்கு தாக்கல் செய்த பிறகு என்னுடைய ஆடிட்டரிடம் கூறி வழக்கிற்காக தயார் செய்யப்பட்ட ஆவணங்கள் என்று சொன்னால் சரியல்ல.

4 தவணைகளில் தலா ரூ.5 இலட்சத்தை நான் என் கைவசம் வசூலாகி வைத்திருந்த பணத்தை வைத்து தான் கொடுத்தேன். G.G.R Enterprises என்ற பெயரில் தான் நான் பைனான்ஸ் தொழிலையே செய்து

வருகிறேன் என்பதை நிரூபிக்க ஆவணம் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி நிறுவனத்தில் இருந்து தான் நான் ரூ.20 லட்சத்தை எடுத்து பிரதிவாதிக்கும் அவரது தாயாருக்கும் கொடுத்தேன்.

GGR Enterprises என்ற நிறுவனம் மூலமாக 12 நுகர்வோர் பொருட்களை நான் விநியோகம் செய்து வருகிறேன். நான் செய்யும் G.G.R Enterprises, பைனான்ஸ், ரியல் எஸ்டேட் ஆகிய மூன்று தொழிலுக்கும் சேர்த்து ஒரே வருமான வரியை தான் நான் செலுத்தி வருகிறேன். வாதசாஆ.6 மற்றும் வாதசாஆ.7 –ல் ரியல் எஸ்டேட், G.G.R Enterprises மற்றும் பைனான்ஸ் பற்றி குறிப்பிட்டுள்ளேனா என்றால் ஆமாம்.

பிரதிவாதி கென்னடி எனக்கு ரியல் எஸ்டேட் தொழில் மூலமாக தான் பழக்கம் ஆனார் என்று சொன்னால் சரியல்ல. அவர் எனது ஊர்காரர் மற்றும் Ex–Service Man என்பதால் அவர் கேண்டீன் செல்லும் போது நானும் அவருடன் செல்வேன் அதன் அடிப்படையில் எனக்கு பழக்கம். அந்த அடிப்படையில் பிரதிவாதி ரியல் எஸ்டேட் தொழில் ஏதாவது செய்தாரா என்றால் இல்லை. எனக்கும் எனது தம்பிக்கும் ரியல் எஸ்டேட் தொழிலில் பிரதிவாதி ஏதாவது கையொப்பம் இட்டுள்ளாரா என்றால் இட்டுள்ளார். எதற்காக என்றால் மனைகளை விற்கும் போதும், வாங்கும் போதும் அவருடைய புரோக்கரேஜ் க்காக கையொப்பம் பெற்றோம். அவ்வாறாக பிரதிவாதி சுமார் 10 – 15 ஆவணங்களில் கையொப்பம் இட்டிருப்பாரா என்றால் அதைப்பற்றி எனக்கு ஞாபகம் இல்லை.

30.05.2018 வரை பிரதிவாதியிடமிருந்து புரோ நோட்டு தவிர பொறுப்புருதிக்காக வேறு எந்த வித ஆவணங்களையும் வாங்கவில்லை, அவர் பெயரில் சொத்து ஏதாவது உள்ளதா என்பதை பற்றியும் நான் கேட்டு தெரிந்துக்கொள்ளவில்லை என்று சொன்னால் ஆமாம். தாவா கிரைய ஒப்பந்தம் எழுதுவதற்கு 2 மாதங்களுக்கு முன்பு தான் செட்டில்மென்ட்

ஆவணம் பிரதிவாதியின் தாயாரால் பிரதிவாதியின் பெயருக்கு எழுதிக்கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான்.

தாவா கிரைய ஒப்பந்த தேதியான 13.12.2019 தேதி அன்று நான் எந்தவிதமான பணத்தையும் பிரதிவாதியிடம் செலுத்தவில்லை என்று சொன்னால் சரிதான். கிரைய ஒப்பந்தத்தில் 1–வது சாட்சி எனது தம்பியான கார்த்தி, 2–வது சாட்சி சந்திரன் என்று சொன்னால் சரிதான். மேற்படி இரண்டு சாட்சிகளுக்கும் நான் பணம் கொடுத்த விவரம் பற்றி தெரியாது என்று சொன்னால் எனது தம்பி கார்த்திக்கு தெரியும் கடைசியாக சந்திரனுக்கு தெரியும்.

வாதசாஆ.1 கிரைய ஒப்பந்தத்தில் பிரதிவாதி வட்டிக்காக தான் பணம் கடன் வாங்கியதாக எந்த விவரமும் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். அதே போல் எவ்வளவு வட்டி பாக்கி என்ற விவரத்தை வாதசாஆ.1 லும், பிராதிலும், என்னுடைய பிராமாண வாக்குமூலத்திலும் கூறவில்லை என்று சொன்னால் சரிதான்.

பிரதிவாதியின் வீட்டின் விலை ரூ.30 லட்சம் என்று எந்த அடிப்படையில் நான் நிர்ணயம் செய்தேன் என்றால் பிரதிவாதி தான் கூறினார். நான் 13.12.2019 அன்றே எனது கையில் ரூ.10 லட்சம் வைத்திருந்தேன் என்றும் அதை நான் பிரதிவாதி வசம் கொடுக்க தயாராக இருந்தும் அதனை அவர் பெற்றுக்கொண்டு எனக்கு கிரைய பத்திரம் எழுதிக்கொடுக்கவில்லை. பிரதிவாதி 18 மாதத்திற்குள் பணத்தை மட்டும் திருப்பி தருவதாக கூறினாரா அல்லது வீட்டை காலி செய்து கொடுப்பதாக கூறினாரா என்றால் வீட்டை காலி செய்து என் வசம் ஒப்படைப்பதாக கூறியிருந்தார். மேலும் பாக்கி பணத்தை பெற்றுக்கொண்டு வீட்டை காலி செய்து என் வசம் ஒப்படைத்து விட்டு கிரைய ஆவணம் எழுதிக் கொடுப்பதாக கூறினார்.

கிரைய ஒப்பந்தம் எழுதிய தேதி அன்றே அதில் கண்ட சொத்திற்கான அசல் பட்டா மற்றும் அசல் செட்டில்மென்ட் பத்திரத்தை நான் வாங்கி வைத்துக்கொண்டேன் என்று சொன்னால் சரிதான், அந்த விவரம் வாதசாஆ.1 –ல் எழுதப்பட்டுள்ளதா என்றால் இல்லை. மேற்படி செட்டில்மென்ட் பத்திரத்தையும் பட்டாவையும் 13.12.2019 அன்று பிரதிவாதி வசம் இருந்து நான் வாங்கவில்லை என்றும் வேறு ஒரு காரணத்திற்காக வாங்கியிருந்ததால் தான் அது பற்றிய விவரத்தை கிரைய ஒப்பந்தத்தில் எழுதவில்லை என்று சொன்னால் சரியல்ல.

மேற்படி அசல் செட்டில்மென்ட் பத்திரத்தையும், அசல் பட்டாவையும் பிரதிவாதியிடம் இருந்து நான் பெற்றதற்கு இரசீது ஏதேனும் கொடுத்தேனா என்றால் கொடுத்துள்ளேன். வாதசாஆ.1 ன் படி 13.06.2021 அன்று முடிகிறது என்று சொன்னால் சரிதான். அதன் பிறகு 18 மாதங்கள் கழித்து தான் நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்று சொன்னால் சரிதான்.

13.06.2021 முதல் 09.12.2022 வரை நான் பிரதிவாதியிடம் கிரைய பாக்கி தொகையை பெற்றுக்கொண்டு கிரைய ஆவணம் எழுதிக்கொடுக்குமாறு கேட்டேனா என்றால் கேட்டேன். பிரதிவாதி என்னுடைய அலுவலகத்திற்கு வந்து கொண்டிருந்ததால் கேட்டேன். பிரதிவாதி எனக்கு செலுத்த வேண்டிய வட்டி தொகையை கணக்கிட்டால் அவர் செலுத்த வேண்டிய ரூ.30 இலட்சம் சரியாகி விடும் என்று சொன்னால் சரியல்ல. 13.12.2019 முதல் 09.12.2022 வரை என்னுடைய வங்கி கணக்கில் ரூ.10 இலட்சம் இருப்பு இருப்பதாக நான் கணக்கு காண்பித்துள்ளேனா என்றால் அதை பற்றி எனக்கு ஞாபகம் இல்லை.

பிரதிவாதி கென்னடி எனக்கும் என் தம்பிக்கும் ரியல் எஸ்டேட் தொழில் புரோக்கராக பணியாற்றினார் என்று சொன்னால் எனக்கு அவர் புரோக்கராக பணியற்றவில்லை. எனது தம்பிக்கு மட்டும் எப்போதாவது

புரோக்கராக பணியாற்றியுள்ளார். வாதசாஆ.1 ல் 18 மாதம் என்று அதில் கால அவகசம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். கிரைய ஒப்பந்தம் எழுதுவதற்கு முன்பு அதில் கண்ட சொத்தை நவம்பர் மாதத்தில் சென்று நேரடியாக பார்த்து விட்டு வந்த பிறகு தான் எழுதப்பட்டது.

நான் முதலில் பணம் கொடுக்கும் போது சொத்தை எழுதிவாங்க வேண்டும் என்ற எண்ணம் எனக்கு இல்லை என்று சொன்னால் சரிதான். கடனுக்காக கிரைய ஒப்பந்தம் எழுதிக்கொள்ளலாம் என்று நானும் பிரதிவாதியும் எப்போது முடிவு எடுத்தோம் என்றால் அக்டோபர் 2019 –ல் முடிவு எடுத்தோம். வட்டி தொகையை கேட்டு அவர் வீட்டிற்கு சென்ற போது அவர் வீட்டில் பேசி முடிவெடுத்ததாக வீட்டை எனக்கு கிரையம் செய்து கொடுப்பதாக கூறினார்.

வீட்டின் மதிப்பு 2019 –ம் ஆண்டில் எவ்வளவு என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். இன்று வரை வீட்டின் பட்டா ஜான் கென்னடியின் தாயார் பெயரில் தான் உள்ளது என்பது பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு தாக்கல் செய்யும் போது நான் பிரதிவாதியின் தாயார் பெயரில் உள்ள பட்டாவை ஒரு ஆவணமாக இந்த வழக்கில் இணைத்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய பிராதிலும், பிரமாண வாக்குமூலத்திலும் பிரதிவாதியின் தாயார் பெயரில் தான் பட்டா இருப்பதாக கூறியுள்ளேன் என்று சொன்னால் சரிதான்.

நான் கூறியது போல் 10.02.2017, 20.06.2017, 26.03.2018 மற்றும் 30.05.2018 ஆகிய தேதிகளில் நான் கூறியவாறு பிரதிவாதியும் அவரது தாயாரும் எந்த விதமான பணத்தையும் என்னிடம் இருந்து வாங்கவில்லை என்று சொன்னால், இல்லை வாங்கினார்கள். மேற்க்குறிப்பிட்ட தேதிகளில் நான் குறிப்பிட்டுள்ள தொகைகளை ரொக்கமாக கொடுத்ததற்கு எனக்கு போதிய வசதி வாய்ப்பு இல்லை என்று சொன்னால் சரியல்ல. வருமான வரிக்கணக்கில் நான் அதை காட்டியுள்ளேன்.

நான் கூறுவது போல் உண்மையாகவே பணம் கொடுத்திருந்தால் என்னுடைய வங்கி கணக்கில் இருந்தே பணத்தை பிரதிவாதிக்கு கொடுத்திருக்கலாம் என்றும், நான் அவ்வாறு கொடுக்காததால் தான் ரொக்கமாக கொடுத்ததாக பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. 30.05.2018–க்கு முன்பு என் வசம் ரூ.20 இலட்சம் சட்ட பூர்வமாக இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனக்கு தினமும் ரூ.1 லட்சம் டிரேடிங் மூலமாக வசூல் தொகை வந்தது.

13.06.2021 முதல் 09.12.2022 வரை எனக்கு ரூ.10 இலட்சம் ரொக்கமாக கணக்கு காட்டும் வகையில் என்னிடம் வருமானம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வருமான வரிக்கணக்கில் உள்ளதாக சாட்சி கூறினார். 2021 மற்றும் 2022 க்கான வருமான வரிக்கணக்கை நான் வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

நான் கூறுவது போல் ரூ.10 இலட்சம் என் வசம் ரொக்கமாக இல்லை என்றும் அதனால் தான் பொய்யாக வழக்கை தாக்கல் செய்து நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நானும் எனது தம்பியும் ஜான் கென்னடியை நாங்கள் செய்த ரியல் எஸ்டேட் தொழிலில் புரோக்கராக பயன்படுத்தி வந்தோம் என்று சொன்னால் சரியல்ல.

நாங்கள் எங்களுடைய ரியல் எஸ்டேட் தொழில் சம்மந்தமாக சோளிங்கர், பள்ளிப்பட்டு மற்றும் திருத்தணி ஆகிய சார்ப்பதிவாளர் அலுவலகங்களில் ஜான் கென்னடியை பல ஆவணங்களில் கையொப்பம் பெற்றுள்ளோம் என்று சொன்னால் எனக்காக அவர் வந்தது இல்லை. அவ்வாறு வாங்கப்பட்ட கையொப்பங்களை பயன்படுத்தி வாதசாஆ.1–ஐ நானாகவே தயார் செய்து கொண்டது என்று சொன்னால் சரியல்ல.

நான் பிரதிவாதியின் தாயாருக்கு பணம் கொடுக்காததால் தான் இந்த வழக்கில் ஒரு தரப்பினராக சேர்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதியின் தாயாரை கிரைய ஒப்பந்த ஆவணத்தில் சாட்சியாக

சேர்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். நான் கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பில் பிரதிவாதியை ரூ.10 இலட்சம் பாக்கி கிரைய தொகையை பெற்றுக்கொண்டு வீட்டை காலி செய்து கொடுக்குமாறு கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். நான் கூறுவது தவறு என்றும் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல.

நான் பிரதிவாதியிடம் பாக்கி தொகையான ரூ.10 லட்சத்தை வாங்கி கொள்ளுமாறு பிரதிவாதியிடம் காண்பித்தேனா என்றால் காண்பித்தேன். அவ்வாறு காண்பித்த தேதி எனக்கு ஞாபகம் இல்லை.

பிரதிவாதி என்னிடம் ரூ.2 இலட்சம் கைபதிலாக வாங்கிய பணத்திற்கு அவருடைய செட்டில்மென்ட் பத்திரத்தையும், பட்டாவையும் வாங்கி வைத்துக்கொண்டேன் என்றும் அதை தவிர எனக்கும் பிரதிவாதிக்கும் இடையே வேறு எந்த விதமான டிரான்ஷக்ஷனும் இல்லை என்றும் அதில் ஏற்பட்ட பிரச்சனை காரணமாக நானாகவே ஒரு கிரைய ஒப்பந்ததை தயார் செய்து சார்பதிவாளர் அலுவலகத்திற்கு பிரதிவாதியை அழைத்து சென்று கையொப்பம் மட்டும் பெற்றேன் என்று சொன்னால் சரியல்ல பிரதிவாதி 8 கையொப்பங்கள் போட்டுள்ளர்.

எனக்கு சார்பதிவாளர் அலுவலகங்களில் நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்வதால் எனக்கு நல்ல பரிட்சியம் உண்டு என்று சொன்னால் சரியல்ல. மேற்படி இல்லாத கடனுக்கு பிரதிவாதியின் கையொப்பத்தை வைத்து ஒரு ஆவணத்தை உருவாக்கி அவருடைய சொத்தை அபகரிக்க வேண்டி ஒரு பொய் வழக்கை தாக்கல் செய்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல.

வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பிய பிறகு பிரதிவாதி பேசி தீர்த்து கொள்ளலாம் என்று கூறியும் அதை நான் கேட்காமல் வழக்கை தாக்கல் செய்துவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. அறிவிப்புக்கு பிறகு அவர் என்னிடம் பேசவில்லை. நான் கூறிய டிரான்ஷக்க்ஷன் எதுவும்

சட்டப்பூர்வமானது இல்லை என்று சொன்னால் சரியல்ல. சட்ட பூர்வமானவை தான். கிரைய ஒப்பந்தத்தின் அடிப்படையில் எந்த விதமான பணமும் பிரதிவாதிக்கு கைமாறவில்லை என்று சொன்னால் சரியல்ல. சட்டப்படி இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை:** இல்லை.

Jayamangalam Sudhakaran
II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.11.11 19:07:38 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.